# தாய்வழிச் சமூக மறுதலிப்பும் பாலின முரண்பாடும்

# Maternal social rejection and Gender discord

**முனைவர் ப.சின்னச்சாமி**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, இரத்னவேல் சுப்ரமணியம் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), சூலூர், கோயம்புத்தூர்.

**Dr. P. Chinnasamy**, Assistant Professor, Tamil Department, Rathnavel Subramaniam College of Arts and Science (Autonomous), Sulur, Coimbatore.

ORCID ID:https://orcid.org/0000-0001-9617-1426

**DOI : 10.5281/zenodo.10004984**

## Abstract

In today's postcolonial context, the study of literary texts through theory is proliferating. Tamil theoreticians believe that the results obtained through it are different from the stereotyped ideas and create new thinking bases. Importantly, classical texts, when read theoretically, reveal the state of society at that time and sharpen the knowledge base of the present. By binding the sacred images built on classical texts, the common sense imposed on the life of Tamils can be aimed at. It can be seen that even though the conceptualist ideas which were built in the intellectual capacity of the thinkers of that day prevailed, materialism could not be avoided.

Power had a wide range in feudal society where patriarchy was established. Even in those days when the traditions of Shramana were dominant, the patriarchal thought of Shramana did not celebrate women through the concept of chastity and denigrated them as ugly bodies. Proposing the hypothesis that the thinkers who were in the division of dominants×marginalists have not deviated from the tradition of patriarchal thinking based on gender and have taught virtues that push back the matriarchal society and make the patriarchal power mainstream, it examines the way in which one of the eighteen books, Surupanchamoolam, portrays women. This essay aims to reveal the dialectical function by which moral theories are constructed on women and transform her into a theoretical organism.

**ஆய்வுச் சுருக்கம்**

இன்றைய பின்காலனியச் சூழலில் கோட்பாடுகளின் வாயிலாக இலக்கியப் பிரதிகளை ஆராய்தல் பெருகி வருகிறது. அதன்வழி கண்டடையப்படும் முடிவுகள் செல்லரித்துப் போன கருத்துகளிலிருந்து வேறுபட்டு புதிய சிந்தனைத் தளங்களை உருவாக்கி வருவது ஆரோக்கியமான ஒன்றாக உள்ளது என்று தமிழ் கோட்பாட்டாய்வாளர்கள் கருதுகின்றனர். முக்கியமாக, செவ்வியல் பிரதிகளைக் கோட்பாட்டு வாயிலாக வாசிக்கும்போது அது அன்றைய சமூகத்தின் நிலையை வெளிப்படுத்துவதுடன் தற்காலத்தின் அறிவுத் தளத்தைக் கூர்மைப்படுத்துகின்றன. செவ்வியல் பிரதிகளின் மீது கட்டமைக்கப்பட்ட புனித பிம்பங்களை கட்டுடைப்பதன்வழி தமிழரின் வாழ்வியல் மீது திணிக்கப்பட்ட பொதுப்புத்திகள் திரைவிலகுவதை நோக்கமுடிகிறது. அன்றைய சிந்தனையாளர்களின் அறிவுத் திறனில் கட்டமைத்திருந்த கருத்து முதல்வாத சிந்தனைகள் மேலெழுந்தவாரியாக இருந்தாலும் பொருள்முதல்வாதத்தைத் தவிர்க்க முடியாத நிலைகளும் அப்பிரதிகளில் மையம் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

தந்தைமைய அதிகாரம் நிலைபெற்றுவிட்ட நிலவுடைமைச் சமூகத்தில் அதிகாரம் பரந்துபட்ட எல்லையைக் கொண்டிருந்தது. சிரமண மரபுகள் ஆதிக்கம் பெற்ற அன்றைய காலகட்டத்திலும் ஆணாதிக்கச் சிந்தனை சிரம் தாழ்த்தாது பெண்களைக் கற்பு கருத்துருவத்தின் வழி கொண்டாடுவதும் இழி உடலாகத் தூற்றுவதும் நிகழ்ந்தேறியுள்ளது. ஆதிக்கவாதிகள்×விளிம்புநிலையினர் என்ற பாகுபடுத்தலுக்குள் இருத்தப்பட்ட சிந்தனையாளர்கள் பாலின அடிப்படையில் ஆணாதிக்கச் சிந்தனை மரபிலிருந்து விலகாது செயல்பட்டுள்ளதையும் தாய்வழி சமூகத்தைப் பின்னுக்குத் தள்ளி தந்தைமைய அதிகாரத்தை மைய நீரோட்டமாக்கும் அறங்களை போதித்துள்ளனர் என்ற கருதுகோளை முன்வைத்து, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான சிறுபஞ்சமூலம் எனும் அறப்பிரதி பெண்களைச் சித்திரிக்கும் விதத்தை ஆராய்கிறது. பெண்ணின் மீது அறக் கோட்பாடுகள் கட்டமைக்கப்பட்டு அவளைத் தத்துவார்த்த உயிரியாக மாற்றப்பட்டிருக்கும் இயங்கியல் செயல்பாட்டை வெளிப்படுத்தும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**Keywords**

ஆணாதிக்கம், முரண், ஒழுக்க உடல், ஒழுக்கமற்ற உடல், பெண், தாய்வழிச் சமூகம், Patriarchy, Paradox, Moral body, Immoral body, Woman, Matriarchal society

**முன்னுரை**

அற உருவாக்கம், அதிகார வர்க்கத்தின் பண்பு நலன்களைக் காப்பதை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அது முரண்களைத் தனக்கான தர்க்க அளவுகோல்களாகக் கட்டியெழுப்பியிருக்கிறது. அவ்வளவுகோல்கள் சமூக ஒழுங்கு என்ற அடிப்படைவாதத்தை முன்மொழிகிறது. அவ்வகையில் சிறுபஞ்சமூலம் பாலின அறங்களை வடிவமைத்திருப்பதில், ஆணாதிக்கக் கருத்துருவங்கள் சமூக அதிகாரத்தைப் பெறுவதையும் பெண் அதற்கு இணங்கி வாழவேண்டிய நிலையையும் குறித்து வரையறுத்துள்ளது. இதில் பெண் தலைமையேற்றிருந்த தாய்வழிச் சமூக மரபு மறுதலிக்கப்பட்டு பாலின உறவில் முரண்

உருவாக்கப்பட்டுள்ளதுடன் பெண்ணுக்கான நியதிகள் வடிவமைக்கப்பட்டு ஆணாதிக்கக் கருத்தியல்கள் நிலைநிறுத்தப்பட்டுள்ளது என்ற கருதுகோளை முன்வைத்து இக்கட்டுரை ஆராய்கிறது.

**இயற்கை உடலும் சமூக மனிதர்களும்**

இயற்கை உடலைக் கொண்ட மனிதன் சமூக மனிதனாக மாறும்போது அவன் அதிகாரம் அடிமை என்ற ஏற்றத்தாழ்விற்குள் நிலைநிறுத்தப்படுகிறான். இதில் தாய்வழிச் சமூகம் குறித்த மதிப்பீடுகள் மறுதலிக்கப்பட்டு ஆணாதிக்கக் கருத்துருவங்கள் மொழியப்படுகின்றன. அது பெண்ணையும் பெண் உடலையும் காப்பதாக அறிவுறுத்தப்படுகிறது.

மனிதர் என்ற ஒற்றை நிலைக்குள் உடல்ரீதியான மாறுபாடுகளை முன்வைத்து ஆண், பெண் பாகுபாடு உருவானது. ஆதிப் பொதுவுடைமைச் சமூகத்தில் ஆண், பெண் என்ற பாலின, உடல்சார் பிரிவினை கிடையாது. அது இரு உயிர்களின் ஒப்புமைப்பட்ட இன உற்பத்திக்கான கருவிகளாக இருந்துள்ளது. வெளி என்பதும் இருவருக்கும் பொதுவானதாக, அதிகாரமற்றதாக இருந்துள்ளது என மானிடவியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

ஆனால், ஆண் தலைமையேற்ற நிலவுடைமைச் சமூகத்தில் பெண், கற்பு கருத்தியலால் முடக்கப்பட்டு வரையறைக்குட்பட்ட இன உற்பத்திக் கருவியாகப் பொதுவெளியிலிருந்து அந்நியப்படுத்தப்படுகிறாள். இதில் சமூக வெளி × குடும்ப வெளி என்ற புறவெளி × அகவெளி உருவாக்கப்பட்டு ஆண் அக, புறவெளிக்கான தலைவனாகவும் பெண் அகவெளிக்கு ஒப்புக்கொடுப்பவளாகவும் கட்டமைக்கப்பட்டனர்.

பெண் ஆணுக்கான சேவை உடைமையாக, அவனுக்கான நுகர்வுப் பண்டமாகத் தந்தைவழிச் சமூகத்தில் இருத்தப்பட்டாள். இல்லறத்தாள், பொதுமகள் என்ற முறைகளில் சுரண்டப்பட்டாள். இதன்வழி ஆண், பெண் முரண்பாடு அற மதிப்பீடுகளால் வளர்த்தெடுக்கப்பட்ட விதம் குறித்து விரிவாக ஆராய்வது அவசியமாகிறது. அவ்வகையில்,

1. தாய்வழிச் சமூகத்தை மறுதலித்து பெண் அறம் கட்டமைக்கப்பட்ட விதம்,
2. பெண்ணுக்கான அறம் வகுத்தலில் ஆணாதிக்கம் நிலைநிறுத்தப்படுதல்
3. ஆணாதிக்கக் கட்டமைப்பு பாலினத்தை எதிர் நிலைப்பட்டதாக மாற்றியமைத்தல்

என்பதை சிறுபஞ்சமூலம் என்ற அறநூலை முதன்மை ஆதாரமாகக் கொண்டு ஆராயப்படுகிறது.

**தாய்வழிச் சமூக மறுதலிப்பும் ஆணாதிக்கச் சமய உடலாக்குதலும்**

ஆதிப்பொதுவுடைமைச் சமூகம் பாலின சமத்துவத்தை மையக் கருவாகக் கொண்டிருந்தது. இது பெண்ணைச் சமூகத் தலைமையாகக் கொண்டு இயங்கியது. அது தாய்வழிச்சமூகம் என்று அடையாளப்படுத்தப்படுகிறது. இங்கு அதிகாரத்திற்கோ, அடிமைத்தனத்திற்கோ இடம் இல்லை என்று மானுடவியல் அறிஞர்கள் மதிப்பிடுகின்றனர்.

ஆனால், நிலவுடைமைச் சமூகத்தில் ஆணால் பெண்ணின் சமூகத் தலைமை பறிக்கப்பட்டு 'ஒழுக்க உடல் × ஒழுக்கமற்ற உடல்' என்று பாகுபடுத்தி அவள் சட்டக உயிரியாக மாற்றப்படுகிறாள். தாய்வழிச்சமூகம் குறித்த நினைவுகளை மழுங்கடிக்க ஆணாதிக்கம் அவள் மீது எண்ணற்ற கருத்தியல்களைத் திணிக்கிறது. அக்கருத்தியல்கள் பெண்ணை ஆணின் நுகர்வுக்கான பண்டமாக மாற்றுகின்றது.

"குடும்பம், உடைமை, பாலியல் என்ற அமைப்பிற்குள் ஆணின் நடத்தைகள் மேலெழுந்தவாரியாகக் கட்டமைக்கப்படுவதையும் பெண் கிடைமட்டத்திற்குத் தள்ளப்படுவதையும் நோக்க முடிகிறது. இதன்வழி ஆணாதிக்கச் சமூகம் மேலிருந்தும் தாய்வழி சமூகம் கீழிருந்தும் இணைவதைக் காணமுடிகிறது. இதில் ஒருபுறம் உடைமைச் சமூக வாழ்வியல், குடும்பம் நிறுவனவயப்படுதல், பாலியல் துய்ப்பு அகற்றல் என்ற இறுக்கம் முன்வைக்கப்பட்டு தனிச்சொத்துக்குச் சாதகமான இல்லறத்தை வழிமொழிகின்றன. மறுதலையில் உபரியின் மீதான பற்றறுத்தலையும் உடைமையின் மீதான ஆசையைத் துறத்தலையும் பிறருக்குக் கொடுத்துண்ணலையும் வலியுறுத்துகின்றன. ஆணின் துறவறத்திற்காக அதிகார வேட்கை, பெண் துய்ப்பு, உடல் மீதான பற்று, இளமையின் மீதான ஆசை போன்றவற்றின் மூலம் பெண் மீதான பிற்போக்கான கருத்ததிகாரங்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. இல்லறத்தாள் × பொதுமகளிர் (ஆணுக்கு இத்தகைய பாகுபாடு இல்லை?) என்று பெண் வாழ்வினுள் ஆணாதிக்கம் இறுக்கமடைவதற்கான சாத்தியக் கூறுகளை வடிவமைத்துக் கொடுப்பதிலும் அற இலக்கியங்கள் துணைநிற்கின்றன." (பெயல், ப. 28)

என்ற ப. சின்னச்சாமியின் அற இலக்கியங்கள் குறித்த கருத்து உறுதிப்படுத்துகிறது. பெண் கற்பைக் காத்தொழுகுவதும் ஆண், பெண்ணைத் தனது கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைத்திருப்பதும்தான் சிறந்த அறமாகப் போதிக்கப்படுகிறது. குடும்ப நிறுவனத்திற்குள்ளும் சமூக நிறுவனத்திற்குள்ளும் பெண் காவலுக்குட்பட்ட பொருளாகக் கட்டமைக்கப்படுகிறாள். ஆணாதிக்கம் உற்பத்தி செய்துகொண்ட சமயக் கருத்தியல் அதற்கு பெருந்துணையாற்றியுள்ளது என்பதைச் சிறுபஞ்சமூலம்,

**"கொண்டான் கொழுநன் உடன்பிறந்தான் தன்மாமன்**

**வண்டார்பூந் தொங்கல் மகன்தந்தை – வண்தாராய்!**

**யாப்பார்பூங் கோதை யணியிழையை நன்கியையக்**

**காப்பார் கருது மிடத்து" (சிறுபஞ்ச. 54)**

என்ற பாடல்வழி எடுத்துரைக்கிறது. கணவன், கணவனுடன் பிறந்தவன், மாமன், மகன், தந்தை இந்த ஐவரும் ஒரு பெண்ணின் கற்புக்கு அழிவு வராமல் காக்கத்தக்கவர்கள் என்று ஆணுக்குப் பரிந்துரைப்பதன் பின்னணியில் பெண் சுதந்திர சமூக வெளியிலிருந்து அந்நியப்படுத்தப்படுகிறாள். இந்தக் காவல் என்பது உற்பத்தி வளமையைப் பாதுகாத்தலாக நோக்கப்படுகிறது. விளைச்சலை வேலியிட்டுப் பாதுகாத்து உபரியைப் பெறுவதுபோல பெண்ணைக் காக்கச் சொல்கிறது. "லிங்கம் மூலம் ஆண் எங்கும் நிறைந்தவனாக,

முதன்மையானவனாக உருப்படுத்தப்படுகிறான். பெண்ணின் தேவையைப் பூர்த்தி செய்பவனாக மாற்றப்படுகின்றான். இதுதான் சமூகத்தில் தந்தை உரிமைச் சமூகத்தை வடிவமைக்கக் காரணியாகிறது.” (2005, ப. 20) என்று அரங்கமல்லிகா குறிப்பிடுவதாக செ. சாரதாம்பாள் ‘பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் மொழியும்’ என்ற கட்டுரையில் எடுத்துரைக்கிறார். இதன்வழி தாய்வழிச்சமூகத்தில் சுதந்தரமாக வாழ்ந்த பெண் கற்பு கருத்துருவத்தின்வழி அடிமைப்படுத்தப்படுகிறாள்; கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படுகிறாள் என்பதை அறியமுடிகிறது. இதை மனுதர்ம சாஸ்திரம்,

“இளமையில் தந்தையினாலும் பருவ காலத்தில் கணவனாலும் முதுமையில் மைந்தராலும் காக்கப்பட வேண்டியவர் ஆதலால், மாதர் எஞ்ஞான்றும் தம்மிச்சையாக இருக்கக் கூடாதவர்” (2014, ப. 141)

என்று பெண் ஆணின் காவலுக்கு உட்படுத்தப்பட வேண்டிய பொருளாகப் போதிக்கிறது. இக்கருத்துகளினடிப்படையில் சமணமும், வைதீகமும் முரண்பட்ட சமயங்களானாலும் பெண் என்ற தளத்தில் ஆணாதிக்கத்தில் ஊறித்திளைத்தனவாகவே இணைந்து பயணித்திருப்பதனை அறியமுடிகிறது.

இவ்வகையில், பெண்ணின் புறச் சுதந்திரம் மறுதலைக்கப்பட்டு அகத்திற்குள் ஒடுக்கப்படுகிறது. அகம், புறத்தில் சுதந்திரம் கொண்டிருந்த தாய்வழிச் சமூகச் சந்ததிகள் சமூக மாறுதலில் இருநிலையிலும் ஒடுக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

**ஆணுக்கான அறம் போதித்தலில் ஆணாதிக்கம் நிலைநிறுத்தப்படுதல்**

ஆணாதிக்கச் சமூகம் பாலின அசமத்துவத்திலிருந்து தன் ஆதிக்கத்தை நிலை நிறுத்துக்கொண்டுள்ளது. பெண்ணை வலிமையற்றவளாக்குவதன் மூலம் அவளை ஒடுக்கி சமூக வெளியிலிருந்து புறந்தள்ளி அந்நியப்பட்டவளாக்குகிறது. மொழி மனித சமூகத்தை ஆற்றல்மிகு சமூகமாகக் கட்டமைத்துள்ளது. ஆதிப்பொதுவுடைமைச் சமூகத்திற்குப் பிறகான சமூகத்தில் மொழி அதிகாரவர்க்கத்திற்கானதாகக் கட்டமைக்கப்பட்டது. அரசின் மொழி சட்டமாக, நீதியாக வடிவம் பெற்று குடிமக்களை தனக்குக் கீழான உடல்களாக்கியதுபோல ஆணாதிக்கச் சமூகம் ஆணுக்கான மொழிகளை உருவாக்கி பெண்ணை இகழ்ந்தவளாகக் கட்டமைத்தது. மேற்கட்டுமானமாகிப் போன மொழிக்குள் பெண் மொழி இருட்டடிப்பிற்குள்ளாக்கப்பட்டது. இதற்கு,

“ஆண் அறத்தைக் கட்டமைக்கும் தளத்திலும் பெண் அவ்வறத்திற்கு உட்பட்டவளாக அல்லது அதைச் செயல்படுத்தக்கூடிய தளத்திலும் இருத்தப்பட்டுள்ளதை அவதானிக்கமுடிகிறது.” (பெயல், ப. 28)

என்ற ப. சின்னச்சாமியின் கூற்று வலுசேர்க்கிறது. அவ்வகையில் பெண் மீதான மொழிக் கட்டமைப்பில் இரு கூறுகள் இயங்குவதைக் காணமுடிகிறது. 1. இரசனை மொழியால் உடல், உழைப்பு ரீதியில் சுரண்டுவது, 2. இழி மொழிகளால் சுதந்திர வெளியைக் கட்டுப்படுத்துவது ஆகும். இவ்விரண்டும் பெண்ணை அடிமைப்படுத்தும் செயல்வடிவத்தைக்

கொண்டுள்ளது. முதல்வகை மறைமுகச் சுரண்டல், இரண்டாம்வகை நேரடிச் சுரண்டல். களவு, கற்பு பாடல்களில் இடம்பெற்றுள்ள ஆண் மொழிவுகள் முதல் வகை என்றால் இரண்டாம் வகைச் சுரண்டல்,

**"ஆம்பல்வாய் கண்மனம் வார்புருவம் என்றைந்தும்**

**தாம்பல்வா யோடி நிறைகாத்தல் – ஓம்பார்**

**நெடுங்கழைநீண் மூங்கில் எனவிகழ்ந்தா ராட்டும்**

**கொடுங்குழை போலக் கொளின்" (சிறுபஞ்ச. 55)**

இவ்வகையான ஆணாதிக்க அறமதிப்பீட்டுத் தன்மை கொண்டது. பெண்களை இகழ்ந்து அவர்களை அந்நியப்படுத்துவாராயின் ஓர் ஆண் மனவடக்கத்தைக் காத்தவனாகிறான் என்று சிறுபஞ்சமூலம் பதிவுசெய்கிறது. அதாவது, இயற்கையாக நிகழக்கூடிய பாலுணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த பெண்ணை இகழச்சொல்கிறது. பெண்ணின் புற அழகை விமர்சிப்பதன் மூலம் அவளின் அகத்தை அவமதிக்கிறது. இதுபோன்ற அறமதிப்பீட்டுக் கட்டமைப்புகளை உருவாக்கி 'பெண்ணை அவமதிப்பவனே ஆண்' என்று ஆணுக்கான உயர் இலட்சிய மதிப்பீடு போதிக்கப்படுகிறது.

**"இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்**

**பண்பின்மை பாரிக்கும் நோய்" (குறள். 851)**

இவ்வாறு திருக்குறள் இகழ்தலை 'நோய்' என்று வலியுறுத்துகிறது. ஆனால் சிறுபஞ்சமூலம் மறுதலையாகப் பெண்ணுக்கெதிராக நிறுத்தி அவளை ஆணிடமிருந்து அந்நியப்பட்டவளாக்க முனைகிறது. இது ஆணாதிக்கத்தை நிலைநிறுத்தக் கைக்கொண்ட ஆதிக்க மனநிலை வெளிப்பாடாக அறிய முடிகிறது. இதுபோல, நீண்ட கூந்தலையுடைய பெண்கள் விரும்பினாலும் உளந்தளராமல் (சிறுபஞ்ச. 19) இருப்பானாயின் அவன் மறுபிறவி கொள்வது இல்லை என்று பிறவிப்பயனை முன்வைத்து பெண்ணைத் தனிமைப்படுத்த எத்தனிக்கிறது.

குடும்ப நிறுவனத்திற்குள் ஆணின் கடமைகளாக, இல்லக் கிழத்திகளுக்குக் காவல் வைக்கவேண்டும் (சிறுபஞ்ச. 40), பிறர் இல்லாளை விரும்பி அவரிடத்திற் செல்லாதவர் பெறுதற்கரியராவார் (சிறுபஞ்ச. 52), தனக்கடங்காத மனைவி இருந்தால் உயிர்களுக்கு மற்றொரு மனநோய் வேண்டப்படாது. (சிறுபஞ்ச. 62), என்று வரையறுத்து பெண்ணை அடக்கி ஒடுக்கி வைத்திருப்பவனே சிறந்த ஆணாவான் என்று போதித்து ஆணாதிக்கத்தைக் கெட்டிப்படுத்த முனைந்துள்ளது சிறுபஞ்சமூலம்.

**பாலின உறவில் முரண் வளர்க்கும் அறம்**

ஆணாதிக்க சமூகம் ஆண், பெண்ணை வலிமையுள்ளவன் × வலிமையற்றவள் என்ற அடிப்படையில் பிரித்தாள்கிறது. இந்த முரண்பாடானது ஆணினை வீர உடலாக முன்னிறுத்தியது. பெண்ணை அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு போன்ற குணங்களைச் சுமக்கும் மென்னை உடலாகக் கட்டமைத்தது. மென்மை உடல்கள் ஆணுக்கான நுகர்வுப் பண்டமாக முன்னிறுத்தப்பட்டு மென்மையை, வன்மை ஆள்வதே இம்முரண்பாட்டின் தலையாயக் கடைமையாக்கப்பட்டுள்ளது.

இப்படியாக ஆணாதிக்கக் கட்டுப்பாட்டிற்குள் பெண் வாழ்தலை அறமாக்கிய சிறுபஞ்சமூலம், எந்தெந்த பெண்களை ஆண்கள் நாடிச் செல்லமாட்டார் என்று வரையறைப்படுத்தி, ஆண் × பெண் உறவில் முரணை உருவாக்குகிறது.

**“பூவாதாள் பூப்புப் புறங்கொடுத் தாள்இலிங்கி**

**ஓவாதாள் கோலம் ஒருபொழுதுங் – காவாதாள்**

**யார்யார் பிறர்மனையாள் உள்ளிட்டிவ் வைவரயுஞ்**

**சாரார் பகைபோற் சலித்து” (சிறுபஞ்ச. 42)**

என்ற பாடலில் பருவமடையாதவள், மாதவிடாய் நீங்கியவள், தவமுடையவள், ஒருகாலத்தும் அழகு நீங்காதவள், கற்பைக் காவாத பரத்தை, பிறராகிய யாவர்க்கு உரிய மனையாள் உள்ளிட்ட இந்த ஐவரையும் ஆண்கள் பகைவரைப் போல் வெறுத்து சேரமாட்டார்கள் என்று ஆணுக்கு எதிர்நிலையாக இப்பெண்களை முன்னிறுத்துகின்றது. இதுபோன்று பெண் எந்தெந்த ஆணுடன் இணைய வேண்டும் என்ற வரையறைகளை அறநூல்கள் பேசத் துணியவில்லை. ஆனால் வைதீக சமய அறநூலான மனுதர்ம சாஸ்திரம்,

“ஆடவரின் அழகினையும் வயதையும் பாராட்டாமல் அவர்தம் ஆண்மையை மட்டுமே பொருட்படுத்தி மாதர் ஆடவர்பால் மனம் பற்றிக் கலப்பர்” (2014, ப. 142)

என்று ஒரு பெண்ணுக்கு ஆண்மை ஒன்றே போதும் ஆணிடம் மயங்கி விடுவர் என்று சித்திரிக்கிறது. இவ்வகையில், ஆணின் பாலியல்வெளி சுதந்திரமானதாகவும் பெண்ணின் பாலியல் வெளி சுருக்கப்பட்டதாகவும் உள்ள நிலையில் பெண்ணின் உடலை முன்வைத்து இம்முரண்பாடு பேசப்படுகிறது.

“மக்கள் தொகுதியில் சரிபாதியாக வாழும் பெண்களை வெறும் உறுப்புகளின் தொகுதியாக உடலாகக் காணும் பார்வையில் சமூக இருப்பில் பெண்ணுக்கான இடம் மறுக்கப்பட்டுள்ளது. ஆணுக்கும் பெண்ணுக்கும் பருவத்தில் ஏற்படும் உடல்ரீதியான பாலியல் இச்சையை ஆணுக்கானதாக மட்டும் குறுக்கிப் பெண்ணுடலை வெறுமனே போகப் பொருளாக அறநூல்கள் மதிப்பிட்டுள்ளன.” (2016, ப. 108)

என்ற முருகேசப்பாண்டியன் கூற்றுவழி பெண் உடல் பாலியலுக்கான பண்டமாக நோக்கப்பட்டிருப்பதை அறியமுடிகிறது.

இம்முரண்பாட்டை வளர்த்தெடுக்கும் சிறுபஞ்சமூலம், கற்புடையவளது அழகானது தகுதியுடையது. குளிர்ந்திருக்கும் தோள்களை உடையவளாகிய ஒருவனுடைய மனைவியானவள் அறிவற்றவளாயின் நெருப்புப் போன்றும் நிழலினிடத்து செவ்வெறும்பைப் போன்றும் அவனைத் துன்புறுத்துவள் (சிறுபஞ்ச. 91) என்று பெண்ணை அறிவுத் தளத்திலும் நிராகரிக்கிறது. அறிவற்றவள் என்பது கணவனின் பேச்சைக் கேட்டு நடவாதவளைக் குறிக்கிறது. இது ஆணை மீறிய செயல்பாடாக சிறுபஞ்சமூலம் காண்கிறது.

இதனடிப்படையில் அறமதிப்பீடுகள் பெண்ணை அடித்தளமாகவும் ஆணை மேற்கட்டுமானமாகவும் அணுகியிருப்பதைக் காணமுடிகிறது. ஆண் உடல் வீரமரபு பாற்பட்டது, பெண் உடல் அறமரபு பாற்பட்டது என்ற உடலரசியல் இங்கு முக்கியத்துவப்படுகிறது. அறிவுத் தளத்தில் ஆணின் அறிவே சிறந்தாக முன்னிறுத்தப்படுகிறது. பெண், ஆண் இடும் கட்டளைக்கு உடன்படுபவளாதலால் அவளுக்கான சிந்தனை மறுதலிக்கப்படுகிறது. இருட்டடிப்புச் செய்யப்படுகிறது.

**முடிவுரை**

சிறுபஞ்சமூலம் ஆணாதிக்கத்தை நிலைநிறுத்தும் பொருட்டு ஆண், பெண் உறவில் அசமத்துவ அறத்தைப் போதித்துள்ளது. அகம், புறம் என்ற இருநிலையிலும் பெண் ஒடுக்கப்பட்டு ஆணின் காவலுக்குரிய பொருளாக முன்வைக்கப்பட்டுள்ளாள். ஆண், பெண் உறவில் பெண்ணின் உடலை முன்வைத்து முரண்பாடு பேசப்படுகிறது. அறிவுத் தளத்தில் பெண்ணின் சிந்தனையும் அதன் வழிப்பட்ட தாய்வழிச்சமூக மரபும் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது. சமணமும் வைதீகமும் எதிரெதிர் நிலைகொண்டிருந்தாலும் பெண் என்ற நிலையில் ஒருமித்துப் பயணப்பட்டிருப்பதை அறிய முடிகிறது. தாய்வழி சமூக மரபு மறுதலிக்கப்பட்டு பாலின உறவில் முரண் உருவாக்கப்பட்டுள்ளதுடன் பெண்ணுக்கான நியதிகள் வடிவமைக்கப்பட்டு ஆணாதிக்கக் கருத்தியல்கள் நிலைநிறுத்தப்பட்டுள்ளது என்பதை சிறுபஞ்சமூலம் வெளிப்படுத்தும் அறக்கருத்துகள் வழி அறியமுடிகிறது.

**துணைநூற்பட்டியல்**


1. ..........., 2015, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், சென்னை. சாரதா பதிப்பகம்.
2. சாரதாம்பாள், செ., 2005, பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும், சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
3. சின்னச்சாமி, ப., பாலின அறநெறிப்படுத்தலில் பீடித்திருக்கும் ஆணதிகாரம் - நாலடியாரை முன்வைத்து, பெயல் அரையாண்டு ஆய்விதழ், அக்டோபர் 2018 - மார்ச் 2019.
4. திருலோக சீதாராம் (தமிழாக்கம்), 2014, மனுதர்ம சாஸ்திரம், சென்னை. அலைகள் வெளியீட்டகம்.
5. திருவள்ளுவர், பரிமேலழகர் உரை, திருக்குறள், சென்னை. சாரதா பதிப்பகம்.

6. மங்கை, அ., பெண்கள் பிறப்பதில்லை உருவாக்கப்படுகிறார்கள், rekupthi.blogspot.com/2006/07/blog-post.htm|?m=1, 2006,
7. முருகேசப்பாண்டியன், 2016, மறுவாசிப்பில் செவ்வியல் பிரதிகளை வாசித்தல், சென்னை. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

## References

1. ………., 2015, Eighteen Below Books, Chennai. Sharada Publishing House.
2. Sarathampal, S., 2005, Feminist Psychoanalysis and Women's Writing, Chennai, World Tamil Research Institute.
3. Chinnasamy, P., Pervasive Sexism in Gender Moralization – Presenting Naladiyar, Peyal Semi-Annual Review, October 2018 – March 2019.
4. Thirloka Sitaram (Tamil), 2014, Manudharma Sastra, Chennai. Waves Publishing House.
5. Thiruvalluvar, Parimelazagar Text, Thirukkural, Chennai. Sharada Publishing House.
6. Mangai, A., Women are not born, made, rekupthi.blogspot.com/2006/07/blog-post.htm|?m=1, 2006,
7. Murugesappandian, 2016, Reading Classical Texts in Rereading, Chennai. New Century Book House.

## தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்

**ப.சின்னச்சாமி “ தாய்வழிச் சமூக மறுதலிப்பும் பாலின முரண்பாடும்”** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 3, இதழ் 4, அக்டோபர் 2023, பக். 18-26

## Cite this Article in English

**Chinnasamy. P “ Maternal social rejection and Gender discord”** Pulam: International Journal of Tamilology Studies, Vol.3 Issue 4, October 2023, pp. 18-26